**(2025-26-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE 25 PTM 208**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2026

எம். ஏ. தமிழ் இலக்கியம் — மதிப்பெண்கள் : 75

இரண்டாம் பருவம் — நேரம் : 3 மணி

**இலக்கிய மானிடவியல்**

**பகுதி – அ** **(10x1=10** மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. ஒப்பீட்டு மொழியியல் ஆய்வு என்பது எது?
   அ ) குடும்ப மொழி ஆய்வு   ஆ )இன மொழி ஆய்வு
   இ )வரலாற்று மொழி ஆய்வு   ஈ ) உலக மொழி ஆய்வு
2. வேட்டையாடி உணவு சேகரித்தவர்களை எவ்வாறு அழைத்தனர்?
   அ ) வேடர்   ஆ ) குறவர்   இ ) நாடன்   ஈ ) புனவன்
3. புராணவியலின் தோற்றம் வேதங்களிலிருந்து தொடங்குகிறது என்று கருதியவர் யார்?
   அ) ஆடம்ஸ்   ஆ )மாக்ஸ் முல்லர்   இ ) ஜேம்ஸ்   ஈ ) வின்ஸ்டன்
4. சங்க காலத்தில் அரசு முறை எத்தனை படிம நிலைகளில் வளர்ச்சிப் பெற்றிருந்தது?
   அ ) 5   ஆ) 7   இ ) 3)   ஈ ) 4
5. வெண்மையை சைவத்தின் குறியீடாகக் கூறியவர் யார்?
   அ ) மாணிக்கவாசகர்   ஆ ) நாவுக்கரசர்   இ ) சம்பந்தர்   ஈ ) சுந்தரர்

**கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.** (K2)

6. மானிடவியலாளர்கள் பெரிதும் விரும்புவது எது?
7. சங்க கால தினைப்புன விவசாயத்தைக் குறிப்பிடுக?
8. தமிழ்த் தலபுராணங்களில் மிகப் பழமையானப் புராணம் எது?
9. தமிழர்களின் சமூக அமைப்பானது எந்நிலையிலிருந்து வளர்ச்சியடைந்தது?
10. நெற்றியில் திருநீற்றை முப்பட்டையாகப் பூசுபவர்கள் யார்?

**பகுதி – ஆ ( 5 X 5 = 25 மதிப்பெண்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** **(K3)**

11. அ) மானிடவியல் என்பன யாவை?

(அல்லது )

ஆ) இனவரைவியல் பற்றி எடுத்துரைக்க.

**(த.பி.பா.)**

12. அ) காட்டெரிப்பு வேளாண்மை பற்றிக் குறிப்பு வரைக.

(அல்லது )

ஆ) சங்க கால ஆயர்களின் நிலமும் வாழிடமும் குறித்து எழுதுக.

13. அ) சாலினி வாக்குரைத்த விதத்தைப் புலப்படுத்துக.

(அல்லது )

ஆ) குன்றக்குரவையில் காணலாகும் சமூக பண்பாட்டைக் கூறுக.

14. அ) பண்டைத் தமிழர்களின் சமய விழாக்களைப் பற்றி எழுதுக.

(அல்லது )

ஆ) இரணியவேளை என்பன யாவை.

15. அ) சங்க இலக்கியங்களில் காணப்படும் தழையாடையைத் தெளிவுபடுத்துக.

(அல்லது )

ஆ) திணைகளுக்கேற்ற தழையாடையை எடுத்துரைக்க.

## பகுதி – இ ( **5 X 8= 40** மதிப்பெண்).

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4/K5)**

16. அ) சங்க காலத் தாய்வழிச் சமூகத்தைப் பற்றி தொகுத்தெழுதுக.

(அல்லது )

ஆ) இனக்குழுச் சமூகம் தோன்றிய சூழலை விவரிக்க.

17. அ) சங்க கால நெய்தல் சமூகத்தின் பண்பாட்டை விளக்கியுரைக்க.

(அல்லது )

ஆ) ஆசாரக்கோவை முன்வைக்கும் சமூகத்தை விளக்கி எழுதுக.

18. அ) பண்டைத் தமிழரின் தொல்சமயங்களைப் பற்றி கட்டுரைக்க.

(அல்லது )

ஆ) பண்டைத் தமிழரின் தொன்மங்களை விவரித்து எழுதுக.

19. அ) பௌத்த மரபில் தோன்றிய பத்தினி தெய்வத்தின் செயல்பாட்டை விளக்கியுரைக்க.

(அல்லது )

ஆ) தமிழ்த் தொன்மங்களில் காணப்படும் இரணியனின் காலச்சூழலை எடுத்துரைக்க.

20. அ) சைவ, வைணவ சமயங்களில் காணலாகும் குறியீடுகளைப் பற்றி ஆராய்க.

(அல்லது )

ஆ) சங்க காலக் குடும்பங்களின் வாழ்விடங்களைத் தொகுத்துரைக்க.

*******